## மொத்தத் தேசிய உற்பத்தி, வருமானம், செலவினம்

### பொதுவான போக்குகள்

உண்மையான நியதிகளில் 1983 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 4.9 சத வீதத்தால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சி வீதம், தேசிய கணக்கு களின்* புதிய தொடர்களின் அடிப்படையின் (1982 அடிப்படை) மீது மதிப்பிடப் பட்ட இவ்வளர்ச்சி வீதம், பழைய தொடரின் அடிப்படையின் (1970 அடிப்படை) மீது பெறப்பட்ட வளர்ச்சி வீதத்தினைப் போன்றே இருந்தது. 1982 ஆம் ஆண் டின் 5.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1983 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதம் சிறிதளவில் குறைந்தமைக்கு, பெருந்தோட்ட வேளாண்மைத் துறையில் (தேயிலை தெங்கு) ஏற்பட்ட குறைந்த உற்பத்தியும், யூலைக் கலவரங்களின் காரணமாக கைத்தொழில் உற்பத்தி, வர்த்தகம், பணிகள் ஆகியன பின்தள்ளப்பட்டமையும் பெருமளவு காரணங்களாகும். ஏனைய காரணிகளுடன் பாதகமான காலநிலை நிலைமைகளின் காரணமாக தேயிலை, தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி அதி கரித்த நெல் உற்பத்தியினால் பெருமளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. கலவரங் களின் தாக்கம் சுற்றுலாவில் தங்கியிருக்கும் பணிகள் துறையைத் தவிர்ந்தவற்றை பெருமளவிலோ அல்லது குறிப்பிடத்தக்களவிலோ பாதிக்கவில்லை.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி 1983 ஆம் ஆண்டில் ரூ. 1,090,000 இலட்சங்களென மதிப்பிடப்பட்டது. முன்னைய ஆண்டினைவிட இது 20.6 சத வீதம் கொண்டதொரு அதிகரிப்பாக இருந்தது. மொத்த தேசிய உற்பத்தியின் உண்மையான அதிகரிப்பிற்கு சீராக்கம் செய்யப்பட்ட பொழுது 1983 ஆம் ஆண்டிற்கான உள்ளடக்க மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி 16 சத வீதத்தால் அதிகரித்தது. வேளாண்மை ஏற்று மதிகளின் குறிப்பாக தேயிலையின் விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் சுருக்கியின் உயர்ந்த வீத அதிகரிப்பிற்கு பெருமளவு காரணமாக இருந்தது.

1983 ஆம் ஆண்டில் பன்னாட்டு வர்த்தக மாற்று விகிதம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு சாதகமாக மாறியிருக்கிறது. வர்த்தக மாற்று விகித தாக் கத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் மதிப்பிடப்பட்ட உண்மைத் தேசிய வருவாய் முன்னைய ஆண்டிலும் பார்க்க 1983 ஆம் ஆண்டில் 5.7 சத வீதத்தினால் அதிகரித்திருக்கிறது. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் மிகக் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. சாதகமற்ற வானிலை நிலைமைகள், தேயிலைக் கைத்தொழில் எதிர்நோக்கிய அமைப்புப் பிரச்சினைகளினால் தேயிலை உற்பத்தி விரிவடையத் தவறியமை அதிகரித்துச் செல்லும் தேயிலை விலைகளின் முழு நன்மை யையும் இலங்கை பெற முடியாமல் போனமை துரதிட்ட வசமானதாகும்.

பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி இலங்கையின் குடித் தொகை 1983 ஆம் ஆண்டில் 1.5 சத வீதத்தினால் அதிகரித் திருந்தது. 1983 ஆம் ஆண்டின் நடுவாண்டு குடித் தொகை, 1982 ஆம் ஆண்டின் 151.89 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 154.16 இலட்சங்களாக விளங்கியது.

---

* புதிய தொடர்களுக்கான விளக்கக் குறிப்பு பக்கம் 38-39இல் தரப்பட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டில் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி ரூ. 7.071 (ஐஅ. டொலர் 301) ஆக மதிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மை நியதிகளில் 1983 ஆம் ஆண்டிற்கான தலைக்குரிய வருவாய் முன்னைய ஆண்டினைவிட 2.5 சத வீதம் கொண்டதொரு அதிகரிப்பைக் காட்டியது.

1983 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.9 சத வீதம் கொண்ட உண்மை வளர்ச்சி வீதம் அடையப் பெற்றமைக்கு உள்நாட்டு வேளாண்மைத் துறையின் திருந்திய செயலாற்றமே பெருமளவு காரணமாக இருந்தது. உண்மை நியதிகளில் இத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியின் பங்களிப்பு 9.4 சதவீதத்தினல் அதிகரித்தது. மறுபுறத்தில் 1983 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட வேளாண்மைத் துறை 4.9 சத வீதத்தினல் வீழ்ச்சியடைந்திருந்தது. இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு தேயிலை, தெங்கு துணைத் துறைகளின் வெளியீட்டில் ஏற்பட்ட பெரும் இழப்புக்களை ஈடுசெய்யப் போதியனவாக இருக்கவில்லை. பெருந்தோட்ட வேளாண்மையின் குறைந்த செயலாற்றம் வேளாண்மை பதனிடலில் ஒரு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் இதன் கூட்டப்பட்ட பெறுமதி 4.6 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**துறைவகைப்படியான செயலாற்றம்**

1982 - 1983 ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்கான பல்வேறு துறைகளின் வளர்ச்சி வீதங்கள் அட்டவணை 1.7 இல் தரப்பட்டுள்ளன. வேளாண்மை, காட்டுத் தொழில் கடற்றொழில் துறை முன்னைய ஆண்டிலும் பார்க்க 1983 இல் 5.1 சதவீதத்தால் வளர்சியடைந்தது. 1983 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்ந்த வளர்ச்சி வீதத்திற்கு நெல் உற்பத்தியின் அளவில் ஏற்பட்ட 14.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பே பெருமளவு காரணமாகும். சில மாவட்டங்களின் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புக்கள் வரட்சியினல் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியை மிகக் கூடுதலாக எதிரீடு செய்தன. முன்னைய மூன்று ஆண்டுகளிலும் அவதானிக்கப்பட்ட மந்த நிலைமைக்கு மாருக 1983 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்தி 8.2 சதவீதத்தினல் அதிகரித்தது. தேயிலை, தெங்கு ஆகியவற்றின் உற்பத்தி 1983 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. தேயிலையைப் பொறுத்தவரையில் உற்பத்தியில் 4.5 சதவீத வீழ்ச்சி காணப்பட்ட வேளையில் தெங்கு 8.2 சதவீதம் கொண்ட பெருமளவு வீழ்ச்சியைப் பதிவு செய்திருக்கிறது. 1982 ஆம் ஆண்டின் 2.9 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1983 ஆம் ஆண்டில் கடற்றொழில் துறையில் 5.7 சத வீதம் கொண்ட வளர்ச்சி வீதம் அவதானிக்கப்பட்டது.

தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றின் வேளாண்மைப் பதனிடல் கைத்தொழில்களின் கூட்டப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டில் 5.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாருக 4.6 சத வீதத்தினல் வீழ்ச்சியடைந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் கூட்டப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டின் 8.9 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1983 இல் 2 சத வீதத்தால் மட்டும் அதிகரித்தது. இது அரசுடைமையாக்கப்பட்ட கைத்தொழில்களின் உற்பத்தியில் ஏற்பட்ட 15 சத வீதம் கொண்ட வீழ்ச்சியினதும் தனியார் துறைக் கைத்தொழில்களில் ஏற்

பட்ட 26 சதவீதம் கொண்ட அதிகரிப்பினதும் தேறிய விளைவாகும். சிறு கைத் தொழில் துணைத் துறையின் வளர்ச்சி வீதம் 1982 ஆம் ஆண்டின் 10.1 சத வீதம் கொண்ட வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1983 ஆம் ஆண்டில் 4.1 சத வீத மாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. முழுமையாகப் பார்க்கையில் தயாரிப் புத் துறையினது 1982 ஆம் ஆண்டின் 4.8 சத வீதம் கொண்ட விரிவுடன் ஒப்பிடு கையில் 1983 இல் 0.8 சத வீதமாக சிறிதளவால் அதிகரித்தது.

1983 ஆம் ஆண்டில் கட்டடவாக்கத் துறையில் 1 சதவீதம் கொண்ட சிறி தளவு வளர்ச்சி மட்டுமே காணப்பட்டது. தனியார் துறையின் கட்டடவாக்க நடவடிக்கைகள் தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக 1983 ஆம் ஆண்டிலும் வீழ்ச்சி யடைந்தமையைக் காணமுடிந்தது. கொழும்பு மாநகர சபையினால் ஒப்புதலளிக் கப்பட்ட கட்டட வரைபடங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 21 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டட வாக்க நடவடிக்கைகள் தொடர்ந்து உயர்ந்த மட்டத்தில் இருந்தமை தனியார் துறையின் கட்டடவாக்க நடவடிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்தது. மதுறுஓயா செயற்றிட்டத்தின் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இரந்தெனிகல செயற்றிட்டத்தின் புதிய கட்டடவாக்க நடவடிக்கைகளினால் எதிரீடு செய்யப்பட்டது.

மின்வலு, வாயு, தண்ணீர், நலத்துறைப் பணிகள் ஆகியவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி 1983இல் 6.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 1983 ஆம் ஆண்டில் மின்வலு உற்பத்தி முன்னைய ஆண்டிலும் பார்க்க ஏறத்தாழ 2.3 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. எனினும் வாயு உற்பத்தி ஏறத்தாழ 20 சதவீதத்தினால் அதிகரித் துள்ளது.

போக்குவரத்துத் தொகுதி, தொடர்பூட்டல் துறையின் விரிவாக்கல், முன் னைய ஆண்டின் 6.2 சதவீதம் கொண்ட விரிவுடன் ஒப்பிடுகையில் 1983இல் 4.5 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. இறக்குமதியில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியே இக்குறைந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக இருந்தது.

மொத்த விற்பனை சில்லறை வர்த்தகத் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 1982 ஆம் ஆண்டின் 6 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 1983 இல் 5.3 சதவீதத்தினால் அதிகரித்தன. இங்கும் இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகத்தின் கூட்டப்பட்ட பெறுமதியின் பங்களிப்பும் மெதுவாகவே அதிக ரித்தது.

வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துதுறையின் வளர்ச்சி 1982இன் 11.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 21.4 சதவீதத்தினால் வளர்ச்சி யடைந்தது. குடியிருப்பு உடைமைகளின் கூட்டப்பட்ட பெறுமதி 1982இன் 5.5 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

பொது நிருவாகம், பாதுகாப்பு ஆகியவற்றின் கூட்டப்பட்ட பெறுமதியில் பெருமளவு அதிகரிப்பு 1983இல் ஏற்பட்டது. ஏனைய பணிகள் துறை 1982ஆம் ஆண்டின் 7 சதவீதம் கொண்ட வளர்ச்சிவீதத்துடன் ஒப்பிடுகையில் 1983ஆம் ஆண்டில் சிறிதளவு வீழ்ச்சியைக் கொண்டிருந்தமைக்கு சுற்றுலாத்துணைத்துறை யில் ஏற்பட்டவீழ்ச்சியே பெருமளவு காரணமாகும். சுற்றுலாப் பயணிகளின் மொத்த வருகை முன்னைய ஆண்டிலும் பார்க்க 17.2 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தது.

அட்டவணை 1.7

## நிலையான விலைகளில் (1982) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1982—1983

| துறைகள் | கூட்டப்பட்ட பெறுமதி (ரூ. ப. இ) | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ரூ. ப. இ.) | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பில் சதவீதப் பங்கு |
|---|---|---|---|---|---|---|
| | 1982* | 1983* | 1982 | 1983 | 1983 | 1983 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... | 24,964 | 26,237 | 27.7 | 27.9 | 1,273 | 34.7 |
| 1.1 வேளாண்மை ... | 20,771 | 21.810 | 23.0 | 23.2 | 1,039 | 28.3 |
| 1.1.1 தேயிலை .. | 2,418 | 2,309 | 2.7 | 2.5 | - 109 | -3.0 |
| 1.1.2 இறப்பர் ... | 770 | 833 | 0.9 | 0.9 | 63 | 1.7 |
| 1.1.3 தெங்கு ... | 3,263 | 2,995 | 3.6 | 3.2 | - 268 | -7.3 |
| 1.1.4 நெல் ... | 5,484 | 6,252 | 6.1 | 6.6 | 768 | 20.9 |
| 1.1.5 ஏனையவை ... | 8,836 | 9,421 | 9.8 | 10.0 | 585 | 15.9 |
| 1.2 காட்டுத்தொழில் ... | 1,710 | 1,816 | 1.9 | 1.9 | 106 | 2.9 |
| 1.3 கடற்றொழில் ... | 2,483 | 2,611 | 2.7 | 2.8 | 128 | 3.5 |
| 2. சுரங்கத் தொழிலும் கல் அகழ்வுத் தொழிலும் .. | 2,238 | 2,413 | 2.5 | 2.6 | 175 | 4.8 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 13,601 | 13,710 | 15.1 | 14.6 | 109 | 3.0 |
| 3.1 ஏற்றுமதி பதனிடல் ... | 2,846 | 2,715 | 3.1 | 2.9 | - 131 | -3.6 |
| 3.2 தொழிலகக் கைத்தொழில் ... | 8,777 | 8,953 | 9.7 | 9.5 | 176 | 4.8 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 1,978 | 2,042 | 2.2 | 2.2 | 64 | 1.8 |
| 4. கட்டடவாக்கம் ... | 7,959 | 8,039 | 8.8 | 8.6 | 80 | 2.2 |
| 5. மின்வலு, வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,089 | 1,161 | 1.2 | 1 2 | 72 | 2.0 |
| 6. போக்குவரத்து,களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 8,536 | 8,920 | 9.4 | 9.5 | 384 | 10.4 |
| 7. மொத்த சில்லறை வர்த்தகம் ... | 16,059 | 16,910 | 17.8 | 18.0 | 851 | 23.1 |
| 7.1 இறக்குமதிகள் ... | 4,167 | 4,242 | 4.6 | 4.5 | 75 | 2.0 |
| 7.2 ஏற்றுமதிகள் ... | 2,861 | 2,870 | 3.2 | 3.1 | 9 | 0.2 |
| 7.3 உள்நாட்டு ... | 9,031 | 9,798 | 10.0 | 10.4 | 767 | 20.8 |
| 8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச்சொத்து . | 3,192 | 3,876 | 3.5 | 4.1 | 684 | 18.6 |
| 9. குடியிருப்பக்களின் உடைமை ... | 3,250 | 3,315 | 3.6 | 3.5 | 65 | 1.8 |
| 10. பொது நிருவாகமும், பாதுகாப்பும் ... | 2,812 | 3,673 | 3.1 | 3.9 | 861 | 23.4 |
| 11. வேறு எங்கும் குறிப்பிடப்படாத பணிகள் ... | 8,698 | 8,672 | 9.6 | 9.2 | -26 | -0.7 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 92,398 | 96,926 | 102.3 | 103.1 | 4,528 | 123.3 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | -2.034 | -2,889 | -2.3 | -3.1 | - 855 | -23.3 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 90,364 | 94,037 | 100.0 | 100.0 | 3,673 | 100.0 |

*தற்காலிகம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

துறைவகைப்படியான செயலாற்றத்தின் பகுப்பாய்வு இலங்கையின் பொருளாதாரத்தினது உண்மையான வெளியீட்டுமட்டங்கள் இயலளவு ஆற்றலிலும் பார்க்க கீழே இருப்பதனை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இதன்காரணமாக அரசுடைமையாக்கப்பட்ட பெருந்தோட்ட வேளாண்மை குறிப்பாக தேயிலையினதும், அரச கூட்டுத்தாபனங்களினதும் மொத்த உற்பத்தி ஏறத்தாழ 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இத்துறைகளில் சரியான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுவது பொருளாதாரத்தின் உற்பத்தியாற்றலை பெருமளவில் அதிகரித்து உயர்ந்த வளர்ச்சி வீதத்தினை அடைய துணை நிற்கும் எனலாம்.

**செலவின அமைப்பு**

நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூ. 1,408,000 இலட்சங்களென மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ. 220,000 இலட்சம் கொண்ட அதிகரிப்பாகவும் இருந்தது. மொத்த நுகர்வுச் செலவினம் ரூ. 1,057,000 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டிலும் பார்க்க ஏறத்தாழ 20 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. தனியார் நுகர்வு ரூ. 955,000 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினதைவிட ஏறத்தாழ 19 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. அரசின் நுகர்வு முன்னைய ஆண்டிலும் பார்க்க ஏறத்தாழ 23 சதவீதமான அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் மீதான செலவினம் ரூ. 350,000 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ. 44,000 இலட்சம் அல்லது 15 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. தனியார் துறை, அரச கூட்டுத்தாபனங்களின் மூலதனவாக்கம் 16 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அரசதுறையின் மூலதனவாக்கம் 7 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 1.8

**இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களில் தெரிந்தெடுக்கப்பட்ட சில விடயங்கள்**

(கொ. கா. க. பெறுமதி ''000 ரூபாய்களில்)

| விடயம் | 1908 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|
| 1. பேருந்துகளும் பயணத்தர் வண்டிகளும் ... | 421,207 | 338,430 | 309,749 | 515,751 |
| 2. சரக்கு வண்டிகளும் வான்களும் ... | 765,460 | 771,071 | 658,875 | 824,041 |
| 3. பொறிகள் பொருத்தப்பட்ட அடிச் சட்டம் ... | 235,296 | 59,317 | 222,518 | 107,319 |
| 4. இழு பொறிகள் ... | 370,246 | 116,148 | 86,092 | 212,812 |
| 5. நிலச்சமப்படுத்தும் பொறிகள் ... | 512,351 | 350,451 | 362,904 | 394,854 |
| 6. புகைவண்டித் தொடர்களும் பாகங்களும் ... | 300,043 | 123,124 | 169,589 | 3,925 |
| 7. வானூர்திகளும் வான்கலங்களும் ... | 3,725 | 760 | 2,437,599 | 775,318 |
| 8. கடற்கலப்பொறிகள் கடலின் வெளிப்புறபொறிகள்... | 107,334 | 73,952 | 47,987 | 65,286 |
| 9. கப்பல்கள், எண்ணெய்க் கப்பல்கள், இழுவைக் கப்பல்கள் ... | 6,721 | 421 | 999,327 | 826,916 |
| 10. மின் உருவாக்கிகள் ... | 117,457 | 264,984 | 145,220 | 209,589 |
| 11. கடைச்சல் அரைக்கும் பொறிகள், துளையிடற் பொறிகள் போன்றவை ... | 91,659 | 38,591 | 35,013 | 34,355 |

மூலம்: இலங்கைச் சுங்கம்

இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் மொத்தப் பெறுமதி 1982 ஆம் ஆண்டின் 48 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983ஆம் ஆண்டில் 1.2 சதவீதத்தினுல் குறைவடைந்தது. மேலும் 1983ஆம் ஆண்டில் முதன்மை மூலதனப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 1982ஆம் ஆண்டின் 156 சதவீத அதிகரிப்பிற்கு மாருக 27.5 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்தது. கப்பல்கள், வான்கலங்கள், புகைவண்டித் தொடர் வண்டிகள் போன்ற முக்கிய மூலதனப் பொருட்களின் இறக்குமதி 1983 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தது. எனினும் பேருந்துகள், சொகுசு வண்டிகள், சரக்கு வண்டிகள், வான்கள், இழுபொறிகள்' மின் உருவாக்கிகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் அதிகரித்தன.

பொறித் தொகுதிகள், பொறிகள்கொள்வனவைத் தொடர்ந்துகட்டடவாக்கம் மூலதன வாக்கத்தின் முக்கிய இடத்தினைப் பெற்றது. நடைமுறை விலைகளில் கட்டட, கட்டவாக்கத்தில் மூலதனவாக்கம் 1983ஆம் ஆண்டில் 34 சத வீதத்தால் அதிகரித்தது. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டடவாக்க வேலை யின் பெறுமதி ரூ. 71,000 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொறிகள் பொறித்தொகுதிகள் கருவிகளில் மூலதனவாக்கம் 1983ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டினைவிட 21 சதவீதத்தால் அதிகரித்தது.

நில அபிவிருத்தி, மீள்நடுகை ஆகியவற்றின் காரணமாக மூலதனவாக்கம் பெறுமதிநியதிகளில் ஏறத்தாழ 10 சதவீதத்தினுல் அதிகரித்தது. இவ்வதிகரிப் பிற்கு நில அபிவிருத்தி மீள்நடுகை ஆகியவற்றில் ஏற்பட்ட உயர்ந்த செலவு காரணமாக இருந்தது. தேயிலை, இறப்பர், போன்று தெங்கு மீள் பயிரிடப்பட்ட பரப்பளவு வீழ்ச்சியடைந்தது. 1982ஆம் ஆண்டின் 2,004 எக்டேயர்களுக்கெதிராக 1983 இல் 1,367 எக்டேயர்கள் மட்டுமே மீள் நடுகை செய்யப்பட்டது. இறப்ப ரைப் பொறுத்தவரையில் 5,119 எக்டேயர்கள் 1983இல் மீள் நடுகை செய்யப் பட்டன. இது முன்னைய ஆண்டில் மீள் நடுகை செய்யப்பட்ட பரப்பளவைவிட 13 சதவீதம் குறைவானதாகும். 1983ஆம் ஆண்டில் அபிவிருத்திசெய்யப்பட்ட தெங்கின் பரப்பு 6,363 எக்டேயர்களாக விளங்கி முன்னைய ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட பரப்பளவுடன் ஒப்பிடுகையில் 32 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தில் இறக்குமதியின் உள்ளடக்கம் 1982ஆம் ஆண்டின் 36.3 சதவீதத்திலிருந்து 1983இல் 30.9 சதவீதத்திற்கு வரவேற் கத்தக்க விதத்தில் வீழ்ச்சியடைந்தது. 1982ஆம் ஆண்டில் ரூ. 110,000 இலட் சங்களாக விளங்கிய இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் கொ: கா. க. பெறுமதி 1983 இல் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ. 109,000 இலட்சங் களாக விளங்கியது. வான்கலங்கள், கெலிகொப்டர்கள், கப்பல்கள், இழுபொறி கள் தவிர்ந்த மூலதனப் பொருட்களின் இறக்குமதி 1982ஆம் ஆண்டின் 76,000 இலட்சங்களிலிருந்து 1983இல் ரூ 93,000 இலட்சங்களுக்கு 22 சதவீதத்தினுல் அதி கரித்தது. ஏற்கனவே கவனிக்கப்பட்டவாறு உயர்ந்த பெறுமதியுடைய மூலதனப் பொருட்களின் இறக்குமதி 1983ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.9

**மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்**

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 20,845 | 23,279 | 30,360 | 35,246 |
| 2. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. கா. பெறுமதிகளில்) ... | 7,531 | 7,431 | 11,034 | 10,900 |
| 3. கப்பல்களும் விமானங்களும் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதிகளில்) ... | 7,521 | 7,430 | 7,597 | 9,298 |
| 4. 1இன் சதவீதமாக இறக்குமதி உள்ளடக்கம் 2 ... | 36.1 | 31.9 | 36.3 | 30.9 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,
இலங்கைச் சுங்கம்.

**மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்**

1983 ஆம் ஆண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் இலங்கையின் பொருளாதாரம் மொத்தமாக ரூ. 1,726,000 இலட்சம் பெறுமதிகொண்ட மூலவளங்களைக் கொண்டிருந்தது. இவற்றில் ரூ. 1,223,000 இலட்சம் கொண்ட தொகை உள்நாட்டு உற்பத்திகளிலிருந்தும். மிகுதி ரூ. 503,000 இலட்சம் இறக்குமதிகளுக் கூடாகவும் கிடைக்கப்பெற்றது. மூலவளப் பயன்பாட்டில் ரூ. 1,057,000 இலட்சம் நுகர்விற்காகச் செலவிடப்பட்டதுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் இது ரூ. 883,000 இலட்சங்களாக விளங்கியது. 1982ஆம் ஆண்டின் ரூ. 304,000 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 352,000 இலட்சங்கொண்டதொகை மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தில் செலவிடப்பட்டது. இது முன்னைய ஆண்டிலும் பார்க்க மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தில் ஏற்பட்ட 16.0 சதவீத அதிகரிப்பை பிரதிபலித்தது.

1978ஆம் ஆண்டின் நிலையான விலைகளில் மதிப்பிடப்பட்ட மொத்த மூலவளங்கள் 1983 இல் 3.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இறக்குமதிகளின் உட்பாய்ச்சல் 1982ஆம் ஆண்டின் 2.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1983இல் 1.8 சதவீதத்தால் அதிகரித்தது. உண்மை நியதிகளில் மொத்த நுகர்வு 1983இல் 6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 1.5 சதவீதத்தினால் அதிகரித்தது. உண்மை நியதிகளில் அரசதுறையின் மூலதனவாக்கம் 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தனியார்துறை அரச கூட்டுத்தாபனங்களின் மூலதனவாக்கம் 2.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

தேறிய வெளிநாட்டுக் காரணி வாருவாய், தனியார் பணவனுப்பல்கள் தவிர்ந்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. 166,000 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டது. இது உள்நாட்டுச் சேமிப்பில் 40 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் 1982இல் 11.8 சதவீதத்திலிருந்து 13.6 சதவீதத்திற்கு முன்னேற்றமடைந்து காணப்பட்டது. தேறிய வெளிநாட்டுக் காரணி வருவாய் தனியார் மாற்றல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்த தேசிய சேமிப்பு ரூ. 198,000 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட ஏறத்தாழ 29 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. தேசிய சேமிப்புக்கள் விகிதம் 1982ஆம் ஆண்டின் 15 3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1983 ஆம் ஆண்டில் 16.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அட்டவணை 1.10

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் 1978 — 1983

| விடயம் | நடைமுறை சந்தை விலைகளில் (ப.இ.ரூ) | | | | 1978 விலைகளில் | | | | | | | | சதவீத அதிகரிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1981* | 1982* | 1983* | 1978 தொகை ப.இ.ரூ. | 1978 % | 1981* தொகை ப.இ.ரூ. | 1981* % | 1982* தொகை ப.இ.ரூ. | 1982* % | 1983* தொகை ப.இ.ரூ. | 1983* % | 1980 மேலாக 1981 | 1981 மேலாக 1982 | 1982 மேலாக 1983 |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 124,563 | 146,045 | 172,590 | 59,537 | 100 | 75,233 | 100 | 78,328 | 100 | 81,392 | 100 | 5.1 | 4.1 | 3.9 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் | 42,665 | 85,005 | 100,140 | 122,322 | 42,665 | 72 | 50,766 | 67 | 53,355 | 68 | 55,969 | 69 | 5.8 | 5.1 | 4.9 |
| 1.2 பொருட்கள், காரணியல் லாப் பணிகளில் இறக்கு மதிகள் ... | 16,872 | 39,558 | 45,905 | 50,268 | 16,872 | 28 | 24,467 | 33 | 24,973 | 32 | 25,423 | 31 | 3.6 | 2.1 | 1.8 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 124,563 | 146,045 | 172,590 | 59,537 | 100 | 75,233 | 100 | 78,328 | 100 | 81,392 | 100 | 5.1 | 4.1 | 3.9 |
| 2.1 நுகர்வு .. | 36,148 | 75,061 | 88,289 | 105,724 | 36,148 | 61 | 46,967 | 63 | 48,940 | 63 | 51,885 | 63 | 7.7 | 4.2 | 6.0 |
| 2.2 மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 8,521 | 23,279 | 30,360 | 35,246 | 8,521 | 14 | 13,045 | 17 | 13,305 | 17 | 13,504 | 17 | 2.6 | 2.0 | 1.5 |
| 2.2.1 அரசு ... | (3,077) | (4,126) | (5,125) | (5,632) | (3,077) | (5) | (3,328) | (4) | (3,239) | (4) | (3,158) | (4) | -12.5 | - 2.7 | -2.5 |
| 2.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் | (2,056) | (8,360) | (25,235) | (29,614) | (2,056) | (3) | (4,551) | (6) | (10,066) | (13) | (10,346) | (13) | 9.0 | 3.6 | 2.8 |
| 2.2.3 தனியார்துறை ... | (3,388) | (10,793) | | | (3,388) | (6) | (5,166) | (7) | | | | | | | |
| 2.3 இருப்புக்களில் மாற்றம் ... | 33 | 331 | 248 | -210 | 33 | — | 103 | — | 73 | — | -55 | — | — | — | — |
| 2.4 பொருட்களின் ஏற்றுமதிகளும் காரணியல்லாப் பணிகளும் ... | 14,835 | 25,892 | 27,148 | 31,830 | 14,835 | 25 | 15,118 | 20 | 16,010 | 20 | 16,058 | 20 | 3.0 | 5.9 | 0.3 |

*தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.11

**தேசிய சேமிப்புக்கள் 1979 - 1983**

**(நடைமுறைச் சந்தை விலைகளில்)**

(ப. இ. ரூபாய்களில்)

| வகை | 1979 | 1980* | 1981* | 1982* | 1983* |
|---|---|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 52,387 | 66,527 | 85,005 | 100,140 | 122,322 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புக்கள் ... | 7,218 | 7,443 | 9,944 | 11,851 | 16,598 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய்... | – 240 | – 432 | – 1,712 | – 2,034 | – 3,164 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் ... | 754 | 2,260 | 3,918 | 5,494 | 6,401 |
| 5. தேசிய சேமிப்புக்கள் ... | 7,732 | 9,271 | 12,150 | 15,311 | 19,835 |
| 6. உள்நாட்டுச் சேமிப்புக்கள் விகிதம் (1இன் சதவீதமாக2 ) | 13.8 | 11.2 | 11.7 | 11.8 | 13.6 |
| 7. தேசிய சேமிப்பு விகிதம் (1இன் சதவீதமாக 5) ... | 14.8 | 14.0 | 14.3 | 15.3 | 16.2 |

* தற்காலிகம் மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## விளக்கக் குறிப்பு

### தேசியக் கணக்குகளின் புதிய தொடர்கள்

உள்நாட்டு, பன்னாட்டு பொருளாதார மாற்றங்களினால் பாதிப்புறும் இலங்கைப் பொருளாதாரத்தின் அமைப்பு மாற்றங்களுக்கு இடமளிக்கும் பொருட்டு 1983 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி தேசிய கணக்குகளின் கணிப்பில் பன்முகப்படுத்தப்பட்ட திருத்தமொன்றினை மேற்கொண்டது. (i) வேளாண்மை, (ii) வேளாண்மை பதனிடல், (iii) கடற்றொழில், (iv) சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும், (v) மின்வலு, வாயு நீர், நலத்துறைப் பணிகள் (vi) குடியிருப்புக்களின் சொத்துடைமை, (vii) பொது நிருவாகம் ஆகியவற்றுடன் தொடர்பான இப்பயிற்சியினது முதற் கட்டப் பெறுபேறுகள் இவ்வாண்டறிக்கையில் தரப்பட்டுள்ளன.

புதிய தேசிய கணக்குகளின் நிலையான பெறுமதித் தொடர்கள் 1982 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டன. அடிப்படை ஆண்டாக 1982 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக 1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் புதிய பொருளாதாரக் கொள்கைகளினால் சுறுசுறுப்படைந்த பொருளாதாரத்தில் முக்கிய அமைப்பு சீராக்கங்கள் 1982 இல் உறுதியடைந்தமை, இரண்டாவது அனைத்தையும் உள்ளடக்கிய தரவு சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பல 1982ஆம் ஆண்டிலோ அல்லது அதற்குக் கிட்டிய காலத்திலோ நடைமுறைப்படுத்தப்பட்டமை என்பனவாம். 1981/82 ஆம் ஆண்டுகளில் நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீடு இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப் பெற்றது. அது மட்டுமன்றி 1981 இல் தேசிய குடித்தொகை, வீடமைப்புக் கணிப்பும் பொறுப்பேற்கப்பட்டது. புதிய தொடர்களில் திருத்தப்பட்ட முக்கிய துறைகள் கீழே உள்ளன.

1. வேளாண்மை

தேயிலை, தெங்கு, ஏனைய வேளாண்மைப் பண்டங்கள், பழவகை, மரக்கறிகள் ஆகியவற்றினைப் பொறுத்தவரை அவற்றின் கூட்டப்பட்ட பெறுமதிக் கணிப்பிற்கு அண்மைக்கால நுகர்வு, செலவுத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. வேளாண்மைப் பதனிடல்

கூட்டப்பட்ட பெறுமதி கணிப்பிற்கு மிக அண்மைய செலவுத்தரவுகள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

3. மீன் உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமதி மீன் உற்பத்தியில் ஏற்பட்ட மிக அண்மைய செலவுத்தரவுகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் நிறைவுசெய்யப்பட்டன.

4. சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும்

கூட்டப்பட்ட பெறுமதிக் கணிப்புக்களின் அடிப்படை, குறிப்பாக மகாவலி போன்ற பெரிய கட்டடவாக்க நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாக கட்டட மூலப் பொருட்களின் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் கல்லுடைத்தலில் ஏற்பட்ட விரிவாக்கம் போன்றவற்றை உள்ளடக்கத்தக்கதாக இத்துறையின் அமைப்பு ரீதியான மாற்றங்களைப் பிரதிபலிக்கத்தக்கதாக புதுப்பிக்கப்பட்டது.

5. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள்

இத்துறையில் கூட்டப்பட்ட பெறுமதி கணிப்புக்களின் அடிப்படை மிக அண்மைய செலவு, உற்பத்தித் தரவுகளைப் பயன்படுத்திப் புதுப்பிக்கப்பட்டன.

6. குடியிருப்புக்களின் உடைமை

குடியிருப்பு உடைமையின் கூட்டப்பட்ட பெறுமதியைப் புதுப்பிப்பதற்கு தேசிய குடித்தொகை வீடமைப்புத்தரவுகள் நுகர்வோர் நிதித்தரவுகளுடன் சேர்த்துப் பயன்படுத்தப்பட்டன.

7. பொது நிருவாகமும் பாதுகாப்பும்

பொது நிருவாகத்தில் இடம்பெற்ற மாற்றங்கள் கூட்டப்பட்ட பெறுமதியைக் கணிப்பதற்கு ஒன்றுசேர்க்கப்பட்டன.

அட்டவணை அ (1) புதிய தொடர்கள், பழைய தொடர்களின் கூட்டப்பட்ட பெறுமதியின் ஒப்பீட்டினைத் தருகின்றது.

அட்டவணை அ.1

**புதிய (1982) தொடர்கள் பழைய (1970) தொடர்களில் கூட்டப்பட்ட பெறுமதியின் உள்ளடக்கம்**

(ரூ. பத்து இலட்சங்களில்)

| துறை | பழைய தொடர் | புதிய தொடர் | மாற்றம் |
|---|---|---|---|
| 1. வேளாண்மை ... | 20,544 | 20,771 | + 227 |
| 2. கடற்றொழில் ... | 2,903 | 2,483 | — 420 |
| 3. விவசாய பதனிடல் (ஏற்றுமதிகள்) ... | 3,379 | 2,846 | — 533 |
| 4. சுரங்கத் தொழிலும் அகழ்வுத் தொழிலும் ... | 1,734 | 2,238 | + 504 |
| 5. மின்வலு, வளி, நலத்துறைப் பணிகள் .. | 1,244 | 1,089 | — 155 |
| 6. குடியிருப்புக்களின் உடமை ... | 2,052 | 3,250 | +1,198 |
| 7. பொது நிர்வாகமும் பாதுகாப்பும் ... | 2,878 | 2,812 | — 66 |
| மொத்தம் | 34,734 | 35,489 | + 755 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.